# மயிலாடுதுறை நகராட்சி

**2021–ம் ஆண்டு நவம்பர் மாதம் – 30 ஆம் தேதி செவ்வாய் கிழமை**
**மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு.க.பாலு.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **30.11.2021** | **1)** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 409 /2020/நாமா2 மற்றும் வரைபட எண். ம.வ/மா.ந.ஊ.அ(நா.மா) எண் 18 / 2021 நாள்.03.09.2021 –ன்படி வார்டு எண்–4, பிளாக் எண்– 16 நகரளவு எண்– 711/2 , 712/1,2 , 713 மற்றும் வார்டு எண்–4, பிளாக் எண்– 41 நகரளவு எண்– 1/2 –இல் 92247.00 சதுரடியில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி மனைப்பிரிவின் சாலை, பூங்கா , பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்த இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண். 1471/2021 நாள்:11.08.2021 ) இன் படி மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு திருவாளர்கள் ரெ.பாஸ்கரன் மற்றும் சி.குககுருநாதன் என்பவர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவே மேற்படி சாலைகள் 23,473.11 சதுரடி, சதுரடி ,பொது உபயேகம் 347.60 சதுரடி மற்றும் மின்சாரவாரியம் 406.00 சதுரடி இடங்களை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க வட்டாட்சியர் மயிலாடுதுறை அவர்களுக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் தானபத்திரம் ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்.3469/2021/எப்1.** | **தீர்மான எண்:1161**<br><br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.11.2021** | **2)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட அவையாம்பாள்புரம் பகுதியில் உள்ள விஜயா தியேட்டர் உரிமையாளர் திருமதி.G.ராஜம் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்: WA No:168/2013–இன் உத்தரவு நாள்:06.08.2021–ல் ஆக்கிரமிப்பு உரிமம் கட்டணம் நிலுவை தொகையை பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட உத்தரவின் மீது சட்டகருத்துரை வழங்கிட கோரி சென்னை உயர்நீதி மன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.கே.ஜெயபிரகாஷ் நாராயணன், அவர்களுக்கு இவ்வலுவக கடித ந.க.எண் 17706/2008/அ2 , நாள்:25.10.2021–ன் படி கடிதம் அனுப்பப்பட்டதில் விஜயா தியேட்டர் உரிமையாளர் திருமதி.G.ராஜம் என்பவர் ஆக்கிரமிப்பு உரிமம் கட்டணம் நிலுவை தொகையை செலுத்த ஒப்புக்கொண்டதின் பேரில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால். ஆக்கிரமிப்பு உரிமம் கட்டணம் நிலுவை தொகையினை பெற்றுக்கொள்ளலாம் என வழக்கறிரால் சட்ட கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.<br>எனவே ஆக்கிரமிப்பு உரிமம் கட்டணம் செலுத்தாத வருடத்திற்கு தொகையினை பெற்றுக்கொள்ளவும், மயிலாடுதுறை நகராட்சி நகர் சார் ஆய்வாளர் அளவீடு செய்யப்பட்டபடி ,ஆக்கிரமிப்பு அறிவிப்பும் தங்களுக்கு வழங்கப்பட்டதின் படியும் கூடுதல் ஆக்கிரமிப்பு இடத்திற்கு வித்தியாச தொகையினை கணக்கீடு செய்து நகராட்சியில் செலுத்த திருமதி. G.ராஜம் விஜயா தியேட்டர் உரிமையாளர் என்பவருக்கு அறிவிப்பு கொடுக்கவும், விஜயா தியேட்டர் ஒட்டினார் போல் உள்ள நகராட்சி ரோடு மற்றும் சந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள வழக்கின் நீதிமன்ற தீர்ப்பாணையின் நகலை தகவலுக்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை 28. அவர்களுக்க்கு அனுப்பவும், மேற்கண்ட வழக்கு தொடர்பாக சட்ட கருத்துரை கட்டணம் ரூ.5000/– சென்னை உயர்நீதி மன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.கே.ஜெயபிரகாஷ் நாராயணன், அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.கா.எண்:** 17706/2008/அ2 | **தீர்மான எண்:1162**<br>**அனுமதிக்கப்பட்டது** |

**30.11.2021**

**3)** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 27.10.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **விலைப்புள்ளி மதிப்பு ரூ.** | **விலைப்புள்ளி அளித்துள்ள மூன்று நிறுவனங்களின் பெயர்கள்** | **மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம்** | **குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி – பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் 5 எண்ணிக்கை BOV வாகனத்தை பழுது நீக்கம் செய்யும் பணி. | 5,00,000/- | M/s Thiraviyam Infotec, Madurai. | **ரூ. 4,77,750/–** மதிப்பீட்டு அளவு | M/s Thiraviyam Infotec, Madurai. |
| | | | M/S Sree Navin Promotors Pvt., Ltd, Chennai. | **ரூ. 5,15,925/–** மதிப்பீட்டை விட அதிகம் | |

**அலுவலககுறிப்பு :** பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: **6**ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண். 3479/2021/இ1**

**தீர்மான எண்:1163**
**அனுமதிக்கப்பட்டது**

---

**30.11.2021**

**4)** மயிலாடுதுறை நகராட்சி - கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT Scheme) வார்டு எண்.7 ராஜன் தோட்டத்தில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் (Library and Knowledge center) கட்டும் பணி மேற்கொள்வதற்கு மண் சோதனை சான்று (Soil Test Report) மற்றும் வடிவமைப்பு (Design) அண்ணா பல்கலைக்கழகம் பட்டுக்கோட்டை மூலம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.76,700/-ஐ உடன் வழங்கிட கோரி University College of Engineering, பட்டுக்கோட்டை அவர்களது கடிதத்தில் கோரியுள்ளார்கள். எனவே பட்டியல் தொகை ரூ.76,700/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3536/2021/இ1**

**தீர்மான எண்:1164**
**அனுமதிக்கப்பட்டது**

**30.11.2021**

**தீர்மான எண்:1165**
**அனுமதிக்கப்பட்டது**

**5)** மயிலாடுதுறை நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகரின் மக்கள்தொகை 2011–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 85599 ஆகும். நகரின் பரப்பளவு 11.27 ச.கிமீ மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 36.

தற்பொழுது 15வது மத்திய நிதி குழு 2021–22 (15th Central Finance Commission Tied Grant) நிதியில் ரூ.144.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பணிகளின் விவரம்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | **Tied Grant** | |
| 1 | Construction of Resource Recovery Centre (RRC) at Thimmanaykkan padithurai in ward no.7 | 20.00 |
| 2 | Supply and delivery of 20 HP - 1 No (PS.II) and 4 HP - 1 No (Sirkazhi Road) centrifugal sewer pump. | 22.00 |
| 3 | Supply and delivery of 4 HP - 2 Nos (Poombuhar Road & Kallanai Road) centrifugal sewer pump. | 10.00 |
| 4 | Supply and delivery of 10 HP - 1 No (Tharangambadi Road Jenifer Sweet) and 2 HP - 1 No (Chandrikulam Lifting Station) centrifugal sewer pump. | 20.00 |
| 5 | Supply and delivery of 250 KVA Generator with Auto Main Failure (AMF) panel at Mudikandanallur Head works. | 21.50 |
| 6 | Providing Deep bore well at K.K.R. Nagar in ward no.1 | 9.90 |
| 7 | Providing Generator Shed for Water Supply Head Works at Mudikandanallur | 18.50 |
| 8 | Providing distribution line from Vandipettai to Manthoppu Street. | 22.10 |
| | **Total** | **144.00** |

**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4451/2021/இ1**

| | | |
|---|---|---|
| 30.11.2021 | **6)** கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–22ன் கீழ் ரூ.194.70 இலட்சம் மதிப்பீட்டில் மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் உள்ள மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமை செயலகம், சென்னை அரசாணை எண். Go.(Ms).No.92 / நாள். 30.10.2021 மூலம் வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்படி இந்நகராட்சி மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக அமைக்க தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர், சென்னை–28 அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3838/2021/இ1** | **தீர்மான எண்:1166**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.11.2021 | **7)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29280/2020/ IT , நாள்.29.09.2021–இல் இணைத்து வரப்பட்ட பட்டியலில் மயிலாடுதுறை நகராட்சியின் வரி வசூல் சேவை மையத்தின் (NSUDF-UTIS) சேவைக்கான VPN கட்டணத்தொகை 01.04.2021 முதல் 30.06.2021 வரை ரூ59818/–, மற்றும் 01.04.2021 முதல் 30.06.2021 வரை ரூ.59818/– ஆக கூடுதல் ரூ.119636/– (ஒரு லட்சத்து பத்தொன்பதாயிரத்து அறநூற்று முப்பத்து ஆறு மட்டும்) Account Officer,M/s BSNL, Tamilnadu Circle என்ற நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை Account Officer,M/s BSNL, Tamilnadu Circle என்ற நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு .** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.வரி வசூல் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகையினை செலுத்தியதையும் அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண். 481/2012/எப்1** | **தீர்மான எண்:1167**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.11.2021 | **8)** நகர்புற உள்ளாட்சி தேர்தல்–2021 தொடர்பாக, மயிலாடுதுறை நகராட்சியில் நடைபெற உள்ள தேர்தல் முன்னேற்பாடு பணிகள்,வாக்குச்சாவடி மையங்கள் அமைத்தல், வாக்கு எண்ணிக்கை மையம் அமைத்தல் மற்றும் அலுவலர்கள்,பணியாளர்கள் ஊதியம் ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச செலவினத்தொகை ரூ.50,00,000/–(ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்)–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:1914/2021/எப்1** | **தீர்மான எண்:1168**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.11.2021 | **9)** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.925/2021/நாமா2 மற்றும் வரைபட எண். ம.வ/மா.ந.ஊ.அ(நா.மா) எண் 22 / 2021 நாள்.28.10.2021 –ன்படி வார்டு எண்–3, பிளாக் எண்– 26 நகரளவு எண்கள்– 943/1ஏ,943/2,943/3ஏ மற்றும் 943/3பி–இல் 5790.50 சதுரமீட்டர் (1.43 ஏக்கர்) இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி மனைப்பிரிவின் சாலை, பூங்கா , பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்த இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண். 1703 /2021 நாள்:03.09.2021 ) இன் படி மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு திரு.நூருல்அமீன், திருமதி.நூருன்னிசா மற்றும் திரு.ஆர்.ரஞ்சித் என்பவர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவே மேற்படி சாலைகள் 1504.50 சதுர மீட்டர், ,பொது உபயேகம் 29.7 சதுர மீட்டர் மற்றும் மின்சாரவாரியம் 29.65 மீட்டர் இடங்களை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க வட்டாட்சியர் மயிலாடுதுறை அவர்களுக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் தானபத்திரம் ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 4415 /2021/எப்1.** | **தீர்மான எண்:1169** பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |
| 30.11.2021 | **10)** 161–மயிலாடுதுறை சட்டமன்றத்தொகுதி , மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பாகம் எண்124 முதல் 194 வரை உள்ள வாக்குச்சாவடிகளில் 13.11.2021 மற்றும் 14.11.2020 ஆகிய நாட்களில் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் பெறப்பட்ட மற்றும் 20.11.2021 ,21.11.2021 , 27.11.2021 ,மற்றும் 28.11.2021 ஆகிய சிறப்பு முகாம் நாட்களில் பெறப்படவுள்ள படிவம் 6,7,8 மற்றும் 8ஏ ஆகியவற்றை புகைப்படத்துடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை விலைப்புள்ளி கோரி , உள்ளூர் DTP நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 30000/–(முப்பதாயிரம் மட்டும்) –ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**ந.க.எண். 3308/2020/எப்1.** | **தீர்மான எண்:1170** அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2021 | **11)** இந்நகராட்சியில் ஆண்டுக்கணக்குகள் 2020–2021–ம் ஆண்டிற்குரியது கணினியில் இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்து கணக்கினை முடித்து தணிக்கைத்துறைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு கணினி வழி இணையதளத்தில் பட்டய கணக்கர் மூலமாக பதிவேற்றம் செய்து கணக்கினை முடித்து கொடுக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டி அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்:1355/2019/பி1** | **தீர்மான எண்:1171** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.11.2021** | **12)** மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை திட்டத்தில் **86.34** கி.மீ தூரம் கழிவுநீர் குழாய்களும் **3406** ஆள்நுழைவு தொட்டிகளும் **8** கழிவு நீருந்து நிலையங்களும் **7** கழிவு நீரேற்று நிலையங்களும் **9.93** கி.மீ தூரம் கழிவு நீரேற்றும் பிரதான குழாய்களும் **5.85** எம்.எல்.டி திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் PS.8 Pumping Station லிருந்து STP (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்) செல்லும் சுமார் **5** கி.மீ **600** mm PSC Pipe-யானது தீவிர கனமழையின் காரணமாக உடைப்பு ஏற்பட்டு அதிக அளவில் கழிவுநீர் வெளியேறி ரோடுகளில் சென்று மக்களுக்கு சுகாதாரக்கேடு விளைவிக்கும் வகையில் ஏற்பட்டுள்ளது. இவ்வுடைப்பு ஏற்பட்ட காரணத்தினால் நகர் பகுதியில் அமைந்துள்ள நீர் உந்து நிலையங்கள் முழுவதும் இயக்கப்படாத நிலை ஏற்பட்டது. இதனால் நகர் பகுதி முழுவதும் சாக்கடை நீர் வெளியேறி வருவதால் பொது சுகாதார கேடு மட்டுமல்லாமல் குடிநீரில் கழிவுநீர் கலக்கும் நிலையும் ஏற்பட்டுள்து. எனவே இதனை போர்கால அடிப்படையில் சீர்செய்ய வேண்டிய நிர்பந்த நிலை உள்ளது. மேலும் குழாய் உடைப்பால் அருகில் உள்ள தரங்கம்பாடி சாலை மண் சரிந்து விழுந்து பெரியளவில் பள்ளம் ஏற்பட்டு, அவ்வழியாக பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லும் பொழுது குழாய்களில் அதிர்வு ஏற்பட்டு குழாய் பழுது விரிவடைந்துள்ளது. தற்பொழுது வடகிழக்கு பருவமழை பெய்து கொண்டு இருப்பதால் தண்ணீர் அளவு குறையாமல் நிலத்தில் மேல் மட்டத்திற்கு உள்ளதாலும், அருகில் மின்கம்பம் உள்ளதால் அதனை அணைக்கட்டும் பொருட்டும் Sheet pile, மணல் மூட்டை கம்புகள் உபயோகித்து குழாய் பழுதினை நீக்கி அதற்குரிய Rubber sheet, Welding Sheet Clamp அமைத்து சுற்றி கான்கிரிட் கலவை போடவும் இப்பணி போர் கால அடிப்படையில் இப்பழுதினை நீக்கம் செய்து மோட்டார் இயக்கவும் இப்பகுதி மண் மிகவும் சகதியான நிலையில் உள்ளதால் மண் எடுத்த பகுதியில் Wet Mix மூலம் நிரப்பி குழாயினை பதியவும் தோரயமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**3.75** இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு **15**ன் கீழ் செய்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண்:4690/2021/இ1** | **தீர்மான எண்:1172**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **30.11.2021** | **13)** மயிலாடுதுறை நகராட்சிக்கு தினசரி குடிநீர் வழங்கும் தலைமையிடம் நகராட்சி எல்லையிலிருந்து 21 கி.மீ தொலைவில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முடிகண்டநல்லூரில் அமைந்துள்ளது. இக்குடிநீர் திட்டம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. தலைமை குடிநீர் திட்டத்தில் 120 HP திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் தினசரி 6.43 எம்.எல்.டி குடிநீர் 47.50 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிகளின் மூலம் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.<br>தற்போது, தமிழக வானிலை மையம் மூலம் வடகிழக்கு பருவமழை மற்றும் புயலுடன் கூடிய கனமழை 09.11.2021 அன்று தீவிர மழை பெய்யக்கூடும் என ஆரஞ்ச் எச்சரிக்கை அறிவித்ததன் அடிப்படையில் நகராட்சிகளின் நிர்வாக இயக்கநர், மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கானொளி காட்சி மூலம் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் தினமும் விநியோகிக்கப்பட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி முடிகண்டநல்லூர் தலைமை நீரேற்று நிலையத்தில் மின்வாரியம் மூலம் மின் இணைப்பு வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான மின் ஆக்கி Generator ஏதும் இல்லை. 120 HP மோட்டார் இயக்க 250 KVA திறன் கொண்ட மின் ஆக்கி தேவைப்படுகிறது.<br>கடந்த கால தானே புயல் மற்றும் புரவி புயல் காலங்களில் மின் கம்பங்கள் சாய்ந்து மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு ஒரு வார கால இடைவெளியால் குடிநீர் ஏதும் விநியோகம் செய்யப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கடந்த கால நிகழ்வுகளை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் உடனடியாக மின் ஆக்கியின் மூலம் குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செய்ய 250 KVA மின் ஆக்கி (தினசரி வாடகை இனத்தில்) தினசரி வாடகையாக ரூ.22,000/-வீதம் 7 நாட்களுக்கு மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.1,55,000/- (ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இப்பணி அவசர அவசியத்தை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தகாரார் திரு.ய சட்டையப்பன், அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணிமேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்:4691/2021/இ1 | **தீர்மான எண்:1173**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.11.2021 | 14) மயிலாடுதுறை நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020, 2020-21 மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2020-2021ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 10.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:1174<br>அனுமதிக்கப்பட்டது |

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020 | | | | | |
| 1 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு.1, ஆடியார் பிள்ளையார் கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல்.(60 மீட்டர்) | 3,00,000/- | திருமதி. G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ.264485.50<br>(-) 0.02% குறைவு | திருமதி. G.சசிராணி, மயிலாடுதுறை. |
| | | | திரு.S.சீனுவாசன் மயிலாடுதுறை. | ரூ.264620.00<br>(+)0.03% அதிகம் | |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி, துணை இயக்குநர், வேளாண்மைத்துறை அலுவலகம் செல்லும் சாலையை தார்சாலையாக அமைத்தல்.(145 மீ) | 7,00,000/- | திருமதி. G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ.603376.55<br>(-) 0.21% குறைவு | திருமதி. G.சசிராணி, மயிலாடுதுறை. |
| | | | திரு.S.சீனுவாசன் மயிலாடுதுறை. | ரூ.608101.96<br>(+) 0.58% அதிகம் | |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-2021 | | | | | |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி, 31ஆவது வார்டு மாயூரநகர் தெற்கு வீதி, பாடசாலை அருகில் மின்டேங்கிற்கு போர்வெல் அமைத்தல். | 3,20,000/- | திருமதி. G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ.281689.19<br>(-) 0.03% குறைவு | திருமதி. G.சசிராணி, மயிலாடுதுறை. |
| | | | திரு.S.சீனுவாசன் மயிலாடுதுறை. | ரூ.282484.20<br>(+) 0.26% அதிகம் | |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2020-2021 | | | | | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr>
<td rowspan="2">4</td>
<td rowspan="2">வார்டு எண்.7 டபீர் தெருவில் உள்ள அங்கன்வாடியை சீர்செய்யும் பணி.</td>
<td rowspan="2">2,00,000/-</td>
<td>திருமதி.<br>G.சசிராணி,<br>மயிலாடுதுறை.</td>
<td>ரூ.177621.36<br>(-) 0.03%<br>குறைவு</td>
<td rowspan="2">திருமதி.<br>G.சசிராணி,<br>மயிலாடுதுறை.</td>
</tr>
<tr>
<td>திரு.S.சீனுவாசன்<br>மயிலாடுதுறை.</td>
<td>ரூ.178428.85<br>(+) 0.42%<br>அதிகம்</td>
</tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u>:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
ந.க.எண். 1012/2021/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2021</td>
<td>
15) மயிலாடுதுறை நகராட்சி சுமார் 11.27 சதுர கி.மீ பரப்பளவில், 36 வார்டுகளுடன், சுமார் 21867 குடியிருப்புகளும், மற்றும் 85599 மக்கள் தொகையும் கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும்.<br>
மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 549 சாலைகள், தெருக்கள் உள்ளன. இந்நகராட்சியின் சாலைகளின் மொத்த நீளம் 119.213 கி.மீ ஆகும். மழைநீர் வடிகால் 72.28 கி.மீ பராமரிக்கப்படுகிறது.<br>
நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி 16 மெட்ரிக் டன் மக்கும் குப்பையும் 13 மெட்ரிக் டன் மக்காத குப்பையும் ஆக மொத்தம் 29 மெட்ரிக் டன் குப்பைகள் உற்பத்தியாகிறது. வீடுவீடாக குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்படுகிறது. அதனால் பொது சுகாதாரப்பிரில் பொது சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது.<br>
இந்நகருக்கு 21கி.மீ தொலைவில் வடமேற்கு திசையில் முடிகண்டநல்லூர் என்ற இடத்தில் கொள்ளிடம் ஆற்றங்கரையில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப்பெற்றுள்ளது. நகராட்சி மூலம் தலைமை குடிநீரேற்று நிலையத்திலிருந்து 120 குதிரை திறன் கொண்ட இரண்டு மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு நகரில் உள்ள வரதாச்சாரியார் பூங்கா- 1 எண்ணிக்கை, மாமரத்து மேடை – 2 எண்ணிக்கை, K.K.R. நகர் - 1 எண்ணிக்கை, பாரதி நகர் பூங்கா – 1 எண்ணிக்கை ஆகிய 5 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டும் மற்றும் சித்தர்காடு, வண்டிப்பேட்டை ஆகிய ஆள்துளை கிணறு மூலமும் தினசரி 7.88 மில்லியன் லிட்டர் ( MLD ) இந்நகர மக்களுக்கு சராசரியாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 92 லிட்டர் வீதம் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை சீராக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br>
இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.727 நாள்.30.12.2000–ல் தேசிய நதி நீர் பாதுகாப்பு (NRCP) திட்டத்தின் கீழ் ரூ.42.00 கோடிக்கு
</td>
<td>தீர்மான எண்:1175<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் மத்திய அரசின் மான்ய நிதி – ரூ.20.00 கோடி, தமிழ்நாடு அரசின் மான்ய நிதி – ரூ.15.00 கோடி, மீதமுள்ள ரூபாய் ரூ.7.00 கோடி உள்ளாட்சி அமைப்பின் பங்கு ஆகும். இத்திட்டத்தில் 86.344 கி.மீ தூரம் கழிவு நீர் குழாய்களும் 3406 மனித ஆய்வு குழிகளும் 8 கழிவு நீருந்து நிலையங்களும் 7 கழிவுநீரேற்று நிலையங்களும் 7.780 கி.மீ தூரம் கழிவு நீரேற்றும் பிரதான குழாய்களும் 5.85 எம்.எல்.டி திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2008 முதல் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மொத்தமுள்ள 10,728 வீட்டிணைப்புகளில் இதுவரை 10,565 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 5.50 எம்.எல்.டி கழிவு நீர் தினமும் பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் உள்ள 13 ஏக்கர் நகராட்சி இடத்தில் புல் பாசனத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது 35 வார்டுகளில் பகுதிகளாக நிறைவேற்றப்பட்டும், 17வது வார்டு முழுமையாக விடுப்பட்டும், செயல்பாட்டில் உள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA–2 நாள் 02.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவு கோலின் படி பொது சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி மேற்கொள்ளவும் குடிநீர் வழங்கல் பராமரிப்பு பணிகளுக்கும், பாதாள சாக்கடை கழிவு நீர் பணிகளுக்கும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தேவைப்டும் கூடுதல் பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தவும் அதற்கான செலவினங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கிடவும் முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

பொது சுகாதாரப் பணியாளர்கள்

| வ. எண் | விபரம் | தூய்மை பணியாளர் | ஓட்டுநர் | துப்புரவு பணி மேற்பார்வையாளர் |
|---|---|---|---|---|
| 1. | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | 66 | 7 | 2 |
| 2. | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | 122 | 5 | 9 |
| 3. | இடைவெளி (Gap) | 66 | 2 | 7 |
| 4. | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 66 | 2 | 7 |
| 5. | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் | 461 | 708 | 562 |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | 128.70 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | 155.75 இலட்சம் |

குடிநீர் விநியோகப் பணியாளர்கள்

| வ.எண் | விபரம் | பராமரிப்பு பணியாளர் (Maintenance Worker) |
|---|---|---|
| 1. | தேவைப்படும் பணியாளர்கள் | 19 |
| 2. | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | 3 |
| 3. | இடைவெளி (Gap) | 16 |
| 4. | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 16 |

5. நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விபரம்:

| வ. எண் | தேவைப்படும் பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | மின்கண்காணிப்பாளர் –1 | 1 | 945 |
| 2. | மின்னாளர் –1 (சி - சான்று) | 1 | 712 |
| 3. | மின்னாளர் - 2 (பி - சான்று) | 1 | 708 |
| 4. | பராமரிப்பு பணியாளர்கள் - 11 | 12 | 581 |
| 5. | கீளினர் | 1 | 443 |
| | ஆகமொத்தம் | 16 | |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | 35.25 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | 41.73 இலட்சம் |

பாதாளச்சாக்கடை கழிவுநீர் பணியாளர்கள்

| வ.எண் | விபரம் | பராமரிப்பு பணியாளர் (Maintenance Worker) |
|---|---|---|
| 1. | தேவைப்படும் பணியாளர்கள் | 82 |
| 2. | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | 2 |
| 3. | இடைவெளி (Gap) | 80 |
| 4. | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 74 |

5. நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விபரம்:

| வ. எண் | தேவைப்படும் பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | சுத்திகரிப்பு நிலைய பொறியாளர் | 0 | 1049 |
| 2. | மின் கண்காணிப்பாளர் | 0 | 945 |
| 3. | மின்னாளர் (சி - சான்று) | 8 | 712 |
| 4. | மின்னாளர் (பி - சான்று) | 16 | 708 |
| 5. | பராமரிப்பு பணியாளர்கள் | 31 | 584 |
| 6. | ஆய்வக உதவியாளர் | 0 | 654 |
| 7. | வேதியியலாளர் | 0 | 714 |
| 8. | புதைவடிகால் ஆய்வர் | 2 | 639 |
| 9. | புதைவடிகால் சுத்தம் செய்பவர் | 10 | 558 |
| 10. | புதைவடிகால் பணியாளர் | 3 | 533 |
| 11. | ஓட்டுநர் | 1 | 708 |
| 12. | துலக்குநர் | 3 | 443 |
| | ஆகமொத்தம் | 74 | |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | 164.24 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு<br>(GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | 194.64 இலட்சம் |

**அலுவலக குறிப்பு :–**

பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்கு நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திக்கொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.155.75 இலட்சத்திற்கும் பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகளுக்கு நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திக்கொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்குச ரூ.41.73 இலட்சத்திற்கும் மற்றும் பாதாளச்சாக்கடை கழிவுநீர் நிரந்தர பணியாளர்களுக்கு இடஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமைத்துகொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.194.64 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரும் கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 3350 /2021/இ1**

<table>
<tr>
<td>30.11.2021</td>
<td>16) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட துலா கட்டத்தில் ஐப்பசி மாதம் 2021ம் ஆண்டிற்கு துலா உற்சவ விழாவிற்கு பார்க்அவென்யூ சாலையின் தென்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக விழா கடைகள் 50 நாட்களுக்கு மட்டும் (11.11.2021 முதல் 30.12.2021 வரை) அமைத்தல் கொள்ளும் உரிமத்திற்கு 28.10.2021 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>50 நாட்களுக்குரிய தற்காலிக விழா கடைகள் அமைத்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td>1.</td><td>R.சற்குருநாதன்,<br>25/3B, பில்டெக் காலணி வடக்கு வீதி,<br>திருவிழந்தூர் , மயிலாடுதுறை</td><td>ரூ.3,58,017/-</td></tr>
<tr><td>2.</td><td>S.கணேசன்,<br>26/1, மேலவீதி,<br>திருவிழந்தூர் , மயிலாடுதுறை</td><td>ரூ.3,10,002/-</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
2.மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள R.சற்குருநாதன், 25/3B, பில்டெக் காலணி வடக்கு வீதி, திருவிழந்தூர், மயிலாடுதுறை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட ரூ.10008/- அதிகமாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.17,340/- கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.<br><br>
ந.க.எண்.3407/2021/அ2</td>
<td>தீர்மான எண்:1176<br><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **30.11.2021** | **17)** இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2016 ஜுலை 1 முதல் அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை நாள்: 03.07.2007ன்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஒப்புதலின்படியும் பொதுப்பணித்துறை வழி காட்டுதலின்படியும் உள்ளூர் அங்காடி மதிப்பீட்டின்படியும் வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட்டதால் பேருந்து நிலைய கடைகளின் குத்தகைதாரர்கள் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றம் மற்றும் கூடுதல் நீதிமன்றங்களில் வழக்கு மயிலாடுதுறை நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின்மீது எதிர்வழக்காட நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.K.ராஜ்மோகன், அவர்கள் ஆஜராகி வழக்கு தொடர்பாக வக்காலத்து மற்றும் எதிர்வழக்குறை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. எனவே, நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட (19 வரியில்லா இனங்களின்) வழக்குகளுக்கு உத்தேச செலவுத்தொகை வழங்க ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்,<br><br>**ந.க.எண்.3921/2021/அ2** | **தீர்மான எண்:1177**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>30.11.2021</td>
<td>
18) மயிலாடுதுறை நகராட்சி எல்லையில் 549 எண்ணிக்கையில் பிரதான சாலைகள், தெருக்கள், குறுக்குத்தெருக்கள் ஆக மொத்தம் 119.231 கி.மீ நீளத்திற்கு அமைந்துள்ளது. இதில் கீழ்கண்ட 7 எண்ணிக்கை பிரதான பேருந்து போக்குவரத்து சாலைகள் அனைத்தும் நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது.
இச்சாலைகளின் இணைப்பு சாலைகள் அனைத்தும் மாநில நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் வருவதாலும் மேற்படி சாலைகளின் அளவுகள் நெடுஞ்சாலைத்துறை சாலைகளின் அளவுகளின்படி உள்ளதாலும், மேற்படி சாலைகளை இந்நகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்திட அதிக செலவீனம் ஏற்படுவதாலும் மாவட்ட தலைநகராக இருப்பதாலும் நகராட்சி நிர்வாக நலன் கருதியும், மாண்புமிகு மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் 18.10.2021 அன்று மயிலாடுதுறை நகராட்சி மற்றும் மாநில நெடுஞ்சாலை துறைக்கு இடையே நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரையின் படியும், மாண்புமிகு சுற்றுசூழல் துறை மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 26.10.2021 அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் சுற்றுசூழல் துறை மற்றும் விளையாட்டு துறை அமைச்சர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களால் கீழ்கண்ட 7 சாலைகள் தேர்வு செய்யப்பட்டு இச்சாலைகளை நெடுஞ்சாலைதுறைக்கு ஒப்படைப்பு செய்து நெடுஞ்சாலைதுறையின் மூலமே பராமரித்திட ஏதுவாக இச்சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு மாற்றம் செய்யதிட அறிவுரை வழங்கப்பட்டது.
<table>
<tr><th>வ.எண்</th><th>சாலையின் பெயர்</th><th>நீளம்(மீ)</th><th>அகலம்(மீ)</th><th>பணி மேற்கொள்ளப்பட்ட விபரம்</th></tr>
<tr><td>1</td><td>அரசு மருத்துவமனை சாலை (097009R150)</td><td>780.00</td><td>12.00</td><td>Apr. 19 - 20</td></tr>
<tr><td>2</td><td>பட்டமங்கல தெரு சாலை மணிகூண்டு வரை (097008R128)</td><td>645.00</td><td>10.00</td><td>Oct. 19 - 20</td></tr>
<tr><td>3</td><td>ஆணதாண்டவபுரம் சாலை (097005R057)</td><td>780.00</td><td>6.00</td><td>Dec. 19 - 20</td></tr>
<tr><td>4</td><td>தரங்கம்பாடி - நல்லத்துக்குடி (மாவட்ட ஆட்சியரக சாலை) (097032R446) (097032R447)</td><td>751.00</td><td>7.00</td><td>Feb. 20 - 21</td></tr>
<tr><td>5</td><td>பெரிய கடைத்தெரு முதல் தருமபுரம் ஆதினம் வரை (097008R125) (097007R091)</td><td>2325.00</td><td>6.00</td><td>Oct. 19 - 20</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:1178<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | மகாதானத்தெரு – மார்க்கெட் (097008R127) | 780.00 | 12.00 | Nov. 19 - 20 |
| 7 | பட்டமங்கல ஆராயத்தெரு (மாமரத்து மேடை – திருவாரூர் சாலை) (097028R358) (097021R281) (097024R314) (097022R287) | 1384.00 | 12.00 | Oct. 19 - 20 |
| | | 7445.00 | | |

மேற்படி **7445.00**மீ நீளமுள்ள நகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உரிய தெளிவுரை மற்றும் பரிந்துரை வழங்க கோரி கருத்துரு அனுப்புவதை மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகரட்சியின் பிரதான **7445.00**மீ நீளமுள்ள சாலைகளை மாநில நெடுஞ்சாலைத்துறையில் ஒப்படைக்க எதுவாக மேற்படி, சாலைகளை தற்போது உள்ள நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் மேற்கண்ட 7 சாலைகளை ஒப்படைக்கும் பணியினை மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 4165/2021/இ1**

| | | |
|---|---|---|
| **30.11.2021** | **19)** திட்ட இயக்குநர் தாய்சேய் நலம், சென்னை அவர்களது கடித ந.க.எண்:6227/NUHM/SHS/2021, நாள்:29.10.2021–ல் மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் தாய் சேய் நல மருத்துவமனை அமைத்திட நீதி ரூ.25.00/–இலட்சம்( இருபத்து ஐந்து இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ,மேற்படி தாய்சேய் நல விடுதி அடைத்திட உரிய இடம் தேர்வு செய்து அனுப்பிடவும் தெரிவிக்கப்பட்டதன் படி மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15–வது நிதி குழு நல திட்ட நிதி 2021–22–ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:**4507/2021/இ1 | **தீர்மான எண்:1179**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.11.2021 | **20)** மயிலாடுதுறை நகராட்சி ஜெட்ராட் வாகனம் TN–51–P–0798 தகுதி சான்று பெற வேண்டி உள்ளதால் இவ்வாகனத்தின் பழுதுளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற தக்க வகையில் புதுப்பிக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.21,000/– (ரூபாய் இருபத்தி ஓராயிரம் மட்டும்) இதனை நகராட்சி குடிநீர் திட்டநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளியினை ஏற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:4174/2021/இ1** | **தீர்மான எண்:1180**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.11.2021 | **21)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை கழிவு நீர் வாகனம் TN–51–C–3108 தகுதி சான்று பெற வேண்டி உள்ளதால் இவ்வாகனத்தின் பழுதுளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற தக்க வகையில் புதுப்பிக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,60,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) இதனை நகராட்சி குடிநீர் திட்டநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளியினை ஏற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:3541/2021/இ1** | **தீர்மான எண்:1181**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.11.2021 | **22)** மயிலாடுதுறை நகராட்சி –அருள்மிகு, மயூரநாதர் சுவாமி திருகோவில் துலாஸ்நானம்– கடைமுழுக்கு விழா 2021 முன்னிட்டு காவிரி ஆற்றில் திருமுழுக்கு இடும் பக்தர்கள் உடைமாற்றவும், பெண்கள் குளிக்கவும் ,சிறுநீர் மற்றும் கழிப்பிட வசதிக்காக மறைப்பு ஏற்படுத்தும் பணி GI Sheet மற்றும் சௌவுக்கு மரம் பயன்படுத்தி தற்காலிகமாக ஏற்படுத்த வேண்டியுள்ளது.<br>இதற்கான குளியலறை ஆண்/பெண்கள் தலா மூன்றும்,பெண்கள் உடைமாற்றும் அறை ஒன்றும் திருமுழுக்கு நடைபெறும் காவிரி கரையில் அமைக்க வேண்டியுள்ளது. மேலும், பொதுசுகாதாரம் உறுதி செய்ய மருந்துகள் வழங்கும் இடம் ஒன்றும் அப்பகுதியில் GI sheet (தகர) வைத்து ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.65,000/–( ரூபாய் அறுபத்தைந்தாயிரம் மட்டும்) ஆகும்.<br>இப்பணியை அவசர அவசிய பணியாக மேற்கொள்ளவும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைவிகித அடிப்படையில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:5142/2021/இ1** | **தீர்மான எண்:1182**<br>**அனுமதிக்கப்பட்டது** |